DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.238/2025**

Prosecution **PW.5**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பாலாஜி | கிராமம் : | |
| தந்தை பெயர் : | லட்சுமணன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026
எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் திருச்சி மாவட்டம், துறையூரில் குடியிருந்து தனியார் ஆயில் கம்பெனியில் மேனேஜராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன சதிஷ்குமாரைத் தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியும். 26.08.2021 அன்று மதியம் 03.00 மணியிலிருந்து 04.00 மணியிருக்கும் நானும் எனது மாப்பிள்ளை சஞ்சிவிராமும் பெட்ரோல் அடிப்பதற்காக லாலாப்பேட்டை மேற்கே உள்ள இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கிற்கு சென்றோம்.

2. சதிஷ்குமார் வழக்கம் போல் வேலையை முடித்துவிட்டு கரூர்–திருச்சி ரோட்டில் கிழக்கு நோக்கி Splender என்ற இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது பெட்ரோல் பங்க் மேற்கே சதிஷ்குமாருக்கு முன்னால் அதே ரோட்டில் அதே திசையில் வந்த Eicher TN 47 AJ 9956 என்ற பதிவெண் கொண்ட வண்டி திடிரென்று பிரேக் அடித்ததால் பின்னால் வந்த சதிஷ்குமார் Eicher வண்டி மீது மோதிவிட்டார். சதிஷ்குமார் தலையில் அடிப்பட்டது. சம்பவயிடத்தில் இறந்துவிட்டார்.

3. சதிஷ்குமார் குடும்பத்திற்க தகவல் சொன்னேன். பிறகு சதிஷ்குமார் பிரேதத்தை குளித்தலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள்.

போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்திற்கு காரணம் முன்னால் சென்ற ஈச்சர் வண்டி திடிரென்று பிரேக் அடித்ததால் தான் சதிஷ்குமார் ஈச்சர் வண்டி மீது மோதி விபத்தானது. ஆஜர் எதிரி தான் ஈச்சர் வண்டியை ஓட்டி வந்தார். (**சாட்சி எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். )**

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. பட்டியல் சாட்சி –1 செல்வராஜ் எனக்கு தூரத்து சொந்தம். செல்வராஜ் மகன் தான் விபத்தில் இறந்தார். சஞ்சிவிராம், நானும், இறந்து போன சதிஷ்குமார் ஆகியோர்கள் ஒரே இனத்தை சார்ந்தவர்கள் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். விபத்தின் போது ஈச்சர் வண்டியில் என்ன லோடு இருந்தது என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் லாரி சாலை விதிகளுக்கு உட்பட்டு தான் சரியான திசையில் சென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான்.

2. வழக்க சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார் என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் ஈச்சர் லாரியை ஓட்டிவந்தவர் திடிரென்று வேகத்தை குறைத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாகனம் சென்று கொண்டிருக்கும் போது குறுக்கே வாகனம் வந்தாலும் எதிரே வாகனம் வந்தாலும் வேகத்தை குறைக்கவேண்டும் என்றால் சரிதான். முன்னாடி செல்லும் வாகனம் வேகத்தை குறைக்கும் போது பின்னால் வருபவர் கவனமாக வந்தால் விபத்து ஏற்படாது என்றால் சரிதான்.

3. முன்னால் செல்லும் வாகனம் திடிரென்று பிரேக் அடித்து வாகனத்தை நிறுத்தினால் பின்னால் வரும் வாகனம் கவனமாக வந்தால் விபத்து ஏற்படாது என்றால் சரிதான். சதிஷ்குமார் கொஞ்சம் கவனமாக வந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். இறந்த நபர் ஆஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றாலும் எதிரி விபத்திற்கு காரணம் அல்ல என்றாலும் சரியல்ல. பொதுவாக வாகனத்தை ஓட்டிச்செல்பவர் குறுக்கே எதாவது வந்தால் வேகத்தை குறைக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்றால்சரிதான்.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.16 18:21:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.